//மிக மிக அவசரம்// //நினைவூட்டு-1//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2369/ஆ2/2023, நாள். 15.06.2023.

பொருள் தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப் பணி – சிறப்பாசிரியர் பணியிடங்களான (இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் உள்ள) தச்சு, விவசாயம் மற்றும் நெசவு ஆகிய பணியிட விவரங்கள் உரிய படிவத்தில் – அனுப்பக் கோருதல் –சார்ந்து.

பார்வை
1. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13074/சி5/இ4/2023, நாள். 07.06.2023.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.09.06.2023.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு, நகரவை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள சிறப்பாசிரியர் பணியிடங்களான (இடைநிலை ஆசிரியர் ஊதிய விகிதத்தில் உள்ள) **தச்சு, விவசாயம் மற்றும் நெசவு ஆசிரியர்** ஆகிய மூன்று பணியிட விவரங்களை மட்டும் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை எண், நாள் மற்றும் அரசாணை நகலுடன் இணைப்பில் உள்ள உரிய படிவங்களில் (1, 2, 3–ல்) கோரப்பட்டுள்ளபடி மட்டும் எந்த பணியிடங்களும் விடுபடாமல் பூர்த்தி செய்து அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி விட்டு, அதன் Hard Copy –யினை மூன்று நகல்களில் கையொப்பமிடப்பட்டு, இவ்வலுவலக ஆ2 இருக்கை பிரிவில் நேரில் 13.06.2023 அன்று காலை 11 மணிக்குள் தனிநபர் மூலமாக அளித்திடுமாறு கோரப்பட்டது. ஆனால் ஒருசில தலைமை ஆசிரியர்களிடமிருந்து இது நாள் வரை இவ்வலுவலகத்திற்கு வரப்பெறவில்லை. எனவே, இது நாள் வரை அனுப்பாத சார்ந்த அரசு, நகரவை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உடனடியாக 16.06.2023 காலை 11 மணிக்குள் இவ்வலுவலகத்தில் நேரில் அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், பணியிடம் இல்லையெனில் இன்மை அறிக்கையினை அளிக்கப்பட வேண்டும். அனுப்பத்தவறும் பட்சத்தில் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களே முழு பொறுப்பேற்க நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு– உரிய படிவங்கள் 1, 2, 3.
(படிவம் மாற்றக் கூடாது)

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

பெறுநர்
அரசு, நகரவை உயர்/மேல்நிலைப் பள்ளித் – தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி), வேலூர்.

நகல்–சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//